

சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க இளைஞர் அணி சார்பில் ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் பொதுக்கூட்டம் கெங்கவல்லி பேரூர் செயலாளர் சு.பாலமுருகன் ஏற்பாட்டில் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஒன்றிய செயலாளர்கள் சித்தார்த்தன், அழகுவேல், பாலமுருகன், மணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்திற்கு கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் தலைமை தாங்கினார். கழக கொள்கை பரப்பு செயலாளர் திண்டுக்கல் லியோனி கண்டன உரையாற்றினார். இதில் கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் மு.ரா.கருணாநிதி, மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ. ஆறுமுகம், பொதுக்குழு உறுப்பினர் சந்திரமோகன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் சீனிவாசன் அப்பாதுரை, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பிரகாஷ், சிவராமன், பேரூர் செயலாளர்கள் வேலு, சரவணன், முருகேசன், சண்முகம் மற்றும் மாவட்ட, ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# சேலம் மத்திய மாவட்டத்தில் "நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் பல்லாண்டு!" சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் சேலம் ஆர்.ராஜேந்திரன் அறிவிப்பு



கழக அரசு இந்தியத் துணைக் கண்டத்தில் மக்கள் நலன் போற்றும் வகையில், மாநில உரிமைகளுக்குக் குரல் கொடுக்கும் தீரத்துடன், சமூகநீதியைப் பாதுகாத்து, சட்டமன்ற மாண்பினை நிலைநாட்டி, ஜனநாயகக் கோட்பாடுகளை உயர்த்திப் பிடிக்கும் அரசாகவும், ஒன்றிய பா.ஜ.க அரசின் எதேச்சதிகாரப் போக்கிலிருந்து அரசியல்சட்டம் தந்துள்ள கூட்டாட்சிக் கருத்தியலைப் பாதுகாக்கும் முதன்மையான மாநில அரசாகவும் விளங்குகிறது. நான்கு ஆண்டுகளை நிறைவு செய்து ஐந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் திராவிட மாடல் அரசின் மக்களின் மகத்தான பேரன்பைப் பெற்ற முதலமைச்சராகவும் இந்தியாவிற்கே ரோல் மாடலாக தமிழ்நாட்டின் தனிப் பெருந்தலைவராகவும் திகழும் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் நல்லாட்சியின் "நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் பல்லாண்டு!" சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்களை சேலம் மத்திய மாவட்டம் முழுவதும் கீழே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு ஒன்றியத்திலும் குறைந்தபட்சம் நான்கு தெருமுனைக் கூட்டங்களும், அதேபோல ஒவ்வொரு பகுதி, கழகத்திலும் குறைந்தபட்சம் நான்கு தெருமுனைக் கூட்டங்களும் நடத்துவதற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் மாலை சுமார் 05.00 மணிக்கு தொடங்கி, இரவு 08.30 மணிக்குள் நிறைவடைந்திடும் வகையில் எழுச்சியோடும், பொதுமக்களிடம் கழக அரசின் சாதனைகள் சென்றடையும் வகையிலும் ஒன்றிய கழக, பகுதி கழக செயலாளர்கள் சிறப்பான ஏற்பாடுகளை செய்திட வேண்டும் என அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

| சட்டமன்றத் தொகுதி | கழக அமைப்பு | நாள் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|
| ஓமலூர் | ஓமலூர் வடக்கு ஒன்றியம் | 09.05.2025 | திரு.ஆர்.நரசிம்மன் |
| ஓமலூர் | ஓமலூர் கிழக்கு ஒன்றியம் | 10.05.2025 | திரு.சி.குமரவேல் (சி.பி.சிங்காரவேல்) |
| ஓமலூர் | தாரமங்கலம் கிழக்கு ஒன்றியம் | 11.05.2025 | திரு.சி.குமரவேல் (சி.பி.சிங்காரவேல்) |
| | | | வெ.சரண்யா |
| ஓமலூர் | காடையாம்பட்டி கிழக்கு ஒன்றியம் | 12.05.2025 | திரு.வி.கவி.கணேசன் |
| ஓமலூர் | காடையாம்பட்டி மேற்கு ஒன்றியம் | 08.05.2025 | முனைவர் மு.சுப்ரமணியசிவா |
| சேலம் தெற்கு | அம்மாபேட்டை பகுதி | 09.05.2025 | திரு.வி.கவி.கணேசன் |
| சேலம் தெற்கு | கிச்சிப்பாளையம் பகுதி | 10.05.2025 | முனைவர் சுப்ரமணியசிவா |
| சேலம் (தெற்கு) | குகை பகுதி | 11.05.2025 | திரு.நாமக்கல் இராஜகோபால் |
| சேலம் (தெற்கு) | தாதகாப்பட்டி பகுதி | 12.05.2025 | முனைவர் மு.சுப்ரமணியசிவா |
| சேலம் (தெற்கு) | கொண்டலாம்பட்டி பகுதி | 08.05.2025 | திரு.நாமக்கல் இராஜகோபால் |
| சேலம் (மேற்கு) | சூரமங்கலம் பகுதி | 09.05.2025 | திரு.சி.குமரவேல் (சி.பி.சிங்காரவேல்) |
| சேலம் (மேற்கு) | மெய்யனூர் பகுதி | 10.05.2025 | திரு.நாமக்கல் ராஜகோபால் |
| | | | செ.யோகஸ்ரீ |
| சேலம் (மேற்கு) | அழகாபுரம் பகுதி | 11.05.2025 | திரு.திருச்செங்கோடு இந்திரமூர்த்தி |
| சேலம் (மேற்கு) | ஓமலூர் தெற்கு ஒன்றியம் | 12.05.2025 | திரு.நாமக்கல் இராஜகோபால் |
| சேலம் (மேற்கு) | சேலம் வடக்கு ஒன்றியம் | 08.05.2025 | திரு.பவித்ரம் கண்ணன்(எ) ஜானகிராமன் |

-4-

| சட்டமன்றத் தொகுதி | கழக அமைப்பு | நாள் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|
| சேலம் (வடக்கு) | அஸ்தம்பட்டி பகுதி | 09.05.2025 | திரு.திருச்செங்கோடு இந்திரமூர்த்தி |
| சேலம் (வடக்கு) | குமாரசாமிபட்டி பகுதி | 10.05.2025 | திரு.பவித்ரம் கண்ணன்(எ) ஜானகிராமன் |
| சேலம் (வடக்கு) | செவ்வாய்ப்பேட்டை பகுதி | 11.05.2025 | திரு.வி.கவி.கணேசன் |
| | | | திரு.மு.கபில் |
| சேலம் (வடக்கு) | அரிசிபாளையம் பகுதி | 12.05.2025 | திரு.பவித்ரம் கண்ணன்(எ) ஜானகிராமன் |
| சேலம் (வடக்கு) | பொன்னம்மாபேட்டை பகுதி | 08.05.2025 | திரு.சி.செந்தில்குமார் |

**ஆர். ராஜேந்திரன்**
செயலாளர் – சேலம் மத்திய மாவட்ட தி.மு.க.
சுற்றுலாத் துறை அமைச்சர்



புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையம் நினைவு வாயிலில், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத்தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா ஏற்பாட்டில் பொதுமக்களுக்காக சிறப்பு கோடைகால நீர் மோர் தண்ணீர் பந்தல் அமைத்து திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் மேயர் திருமதி திலகவதி செந்தில், துணை மேயர் எம்.லியாகத்அலி, எஸ்.எஸ்.கருப்பையா, சுப.சரவணன், சு.சண்முகம் மற்றும் கழக மூத்த முன்னோடிகள், கழக நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக அமைப்பு சாரா ஓட்டுனர் அணி நிர்வாகிகள், அனைத்து அணிகளைச் சார்ந்த மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் பலரும் கலந்து கொண்டனர்.

# வேலூர் மாவட்ட தி.மு.க சார்பில்

# நாடு போற்றும் நான்காண்டு - தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்க பொதுக் கூட்டங்கள்!

## மாவட்ட கழக செயலாளர் ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிவிப்பு



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்களின் அறிவிப்பின்படி நாடு போற்றும் நான்காம் ஆண்டு தொடரட்டும் இது பல்லாண்டு என மக்கள் விரும்பும் திராவிட மாடல் அரசின் சாதனைகளை வேலூர் மாவட்ட தி.மு.க வுக்கு உட்பட்ட 5 சட்டமன்றத் தொகுதிகளில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலின் படி நடத்திட மாநகர ஒன்றிய நகர பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் உரிய முன் ஏற்பாடுகளைச் செய்து சாதனை விளக்க பொதுக்கூட்டங்கள் வெற்றிப் பெற செய்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ.எண் | தேதி | அமைப்பு | கழகப் பேச்சாளர் |
|---|---|---|---|
| 1. | 08.05.2025 | அணைக்கட்டு மத்திய ஒன்றியம் | காஞ்சி டி.எஸ் .அபுபக்கர் |
| 2. | 08.05.2025 | காந்திநகர் பகுதி | கலைச்செல்வி ஜெகநாதன் |
| 3. | 08.05.2025 | காட்பாடி தெற்கு ஒன்றியம் | வே. நவீந்தர் |
| 4. | 08.05.2025 | குடியாத்தம் வடக்கு ஒன்றியம் | விஷார்.க. தமிழரசன் |
| 5. | 08.05.2025 | பேர்ணாம்பட்டு கிழக்கு ஒன்றியம் | கவிஞர். இரா. பத்திநாதன் |
| 6. | 08.05.2025 | சத்துவாச்சாரி தெற்கு பகுதி | M.R.R.வாசுவிக்ரம் |
| 7. | 08.05.2025 | கஸ்பா பகுதி | காஞ்சிதாவூத் |
| 8. | 09.05.2025 | அல்லாபுரம் பகுதி | ஜான் சுந்தர் |
| 9. | 09.05.2025 | கணியம்பாடி தெற்கு ஒன்றியம் | காஞ்சி டி.எஸ்.அபுபக்கர் |
| 10. | 09.05.2025 | சேண்பாக்கம் பகுதி | புலவர். சாமிநாகப்பன் |
| 11. | 09.05.2025 | வாலாஜா மேற்கு ஒன்றியம் | போஸ் வெங்கட் |
| 12. | 09.05.2025 | குடியாத்தம் கிழக்கு ஒன்றியம் | கவிஞர். சொ. ஆரோக்கியராசு |
| 13. | 09.05.2025 | பேர்ணாம்பட்டு மேற்கு ஒன்றியம் | கவிஞர். செங்கை தாமஸ் |
| 14. | 09.05.2025 | சைதாப்பேட்டை பகுதி | செங்கை சந்தான கிருஷ்ணன் |
| 15. | 10.05.2025 | வேலூர் ஒன்றியம் | நாத்திகம் நாகரசன் |
| 16. | 10.05.2025 | தொரப்பாடி பகுதி | காஞ்சி டி.எஸ் .அபுபக்கர் |
| 17. | 10.05.2025 | காட்பாடி கிழக்கு ஒன்றியம் | கலைச்செல்வி ஜெகநாதன் முகமது சபீர் |
| 18. | 10.05.2025 | கே.வி.குப்பம் கிழக்கு ஒன்றியம் | விஷார்.க. தமிழரசன் |
| 19. | 10.05.2025 | குடியாத்தம் மேற்கு ஒன்றியம் | M.R.R.வாசுவிக்ரம் |
| 20. | 10.05.2025 | குடியாத்தம் நகரம் | காஞ்சி தாவூத் |
| 21. | 10.05.2025 | சலவன்பேட்டை பகுதி | கவிஞர். இரா. பத்திநாதன் |
| 22. | 11.05.2025 | அணைக்கட்டு கிழக்கு ஒன்றியம் | செங்குன்றம் திராவிட மணி ம.ஜ. சந்தீப் |
| 23 | 11.05.2025 | காட்பாடி வடக்கு பகுதி | ஜான் சுந்தர் |
| 24. | 11.05.2025 | காட்பாடி வடக்கு ஒன்றியம் | புலவர். சாமிநாகப்பன் |
| 25. | 11.05.2025 | கே.வி.குப்பம் மேற்கு ஒன்றியம் | கவிஞர். செங்கைதாமஸ் |
| 26. | 11.05.2025 | பேர்ணாம்பட்டு தெற்கு ஒன்றியம் | கவிஞர். சொ. ஆரோக்கியராசு |
| 27. | 11.05.2025 | பேர்ணாம்பட்டு நகரம் | செங்கை சந்தான கிருஷ்ணன் |
| 28. | 11.05.2025 | வேலப்பாடி பகுதி | மலர் மு. கருணாநிதி |
| 29. | 12.05.2025 | அணைக்கட்டு மேற்கு ஒன்றியம் | நாத்திகம் நாகரசன் |
| 30. | 12.05.2025 | காட்பாடி தெற்கு பகுதி | காஞ்சி டி.எஸ் .அபுபக்கர் |
| 31. | 12.05.2025 | காட்பாடி மேற்கு ஒன்றியம் | விஷார்.க. தமிழரசன் |
| 32. | 12.05.2025 | கே.வி.குப்பம் மத்திய ஒன்றியம் | கலைச்செல்வி ஜெகநாதன் |
| 33. | 12.05.2025 | குடியாத்தம் தெற்கு ஒன்றியம் | கவிஞர். ரா. பத்திநாதன் |
| 34. | 12.05.2025 | சத்துவாச்சாரி வடக்கு பகுதி | காஞ்சி தாவூத் |
| 35. | 12.05.2025 | சங்கரன்பாளையம் பகுதி | M.R.R.வாசுவிக்ரம் |


எனவே மேற்கண்ட நிகழ்ச்சி நிரலின் படி நடைபெற உள்ள கழக அரசின் 4 ஆண்டு கால சாதனை விளக்க பொதுக்கூட்டங்களில் மாவட்ட நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் மாநகர ஒன்றிய நகர பகுதி மற்றும் பேரூர் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள் மாநில, மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், வட்ட வார்டு ஊர்கிளை நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்ளும் படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ.**
மாவட்ட கழக செயலாளர்
**வேலூர் மாவட்ட தி.மு.க.**

### தஞ்சை வடக்கு மாவட்ட

# தி.மு.க. மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் கூட்டம் !

## மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை!



*தஞ்சாவூர், மே 06-*

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் நாளை (07.04.2025 - புதன்) காலை 10.00 மணிக்கு நடைபெற உள்ளதாக மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :-

நாளை (07.05.2025 - புதன்கிழமை) காலை 10.00 மணிக்கு கும்பகோணம் சகாஜிநாயக்கன் தெரு, தஞ்சை வடக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் க.நசீர்முகமது தலைமையில் நடைபெற உள்ளது.

கூட்டத்தின் பொருள்கள் :

1) 03.05.2025 அன்று சென்னையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை செயல்படுத்துவது,

2)09.05.2025 அன்று திருச்சிக்கு வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது,

3)கழக ஆக்கப் பணிகள் குறித்து தீர்மானங்கள் நிறைவேற்றுவது.

அதுசமயம் கூட்டத்தில் முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் குறித்த நேரத்தில் தவறாது கலந்துகொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## மிசா எஸ்.பி.தங்கையா
## மே 6 (2014)



நாகை மாவட்டக் கழக முன்னோடி, தலைமைச் செயற்குழு உறுப்பினர், நாகை ஒன்றியச் செயலாளராக 20 ஆண்டுகள் சிறப்பாக பணியாற்றியவர்.

நாகை மாவட்ட துணைச் செயலாளர், மாவட்டப் பொறுப்பாளர், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் உள்ளிட்ட கழகப் பொறுப்புகளை ஏற்று திறம்பட பணியாற்றியவர்.

சின்னத்தும்பூர் ஊராட்சி மன்றத் தலைவராக நான்கு முறையும், நாகை ஒன்றிய பெருந்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் நலப்பணிகளை மேற்கொண்டவர்.

நெருக்கடிநிலை காலத்தில் மிசா கைதியாக ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர். அதுமட்டுமல்லாமல் கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

கழகத் தோழர்களால் அன்பாக 'எஸ்பிடி' என அழைக்கப்பட்டவர். தலைவர் கலைஞர் அவர்களால் 'வேளாங்கண்ணி தங்கையா' என அழைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**